**இராசிபுரம் நகராட்சி தனி அலுவலர் அவர்களால் 28.10.2021–ஆம் தேதி முற்பகல் 11.00 மணிக்கு அவசரக் கூட்டத்தில் நடைபெற உள்ள கூட்ட நடவடிக்கைகள்.**

இராசிபுரம் நகராட்சி, தனி அலுவலர்,
நாள் : .10.2021 இராசிபுரம் நகராட்சி

<u>பொருள்கள்</u>

**(1)** இராசிபுரம் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் மற்றும் குடிநீர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளால் சேதமடைந்த **8692.00** மீட்டர் நீளமுள்ள சாலைகளை சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் தார் சாலைகள் மற்றும் கான்க்ரீட் சாலைகளாகவும் மழைநீர் வடிகால் மற்றும் சிறு பாலங்கள் அமைத்து பணிகள் மேற்கொள்ள சிறப்பு சாலைகள் திட்டம் **2020–21 –** இன் கீழ் ரூ. **600.00** மதிப்பீட்டு சாலைப் பணிகளுக்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். **20557/2020/இ3** நாள் **15.12.2020** அன்று நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இவ்வலுவலக பணியாணை ந.க.எண். **4267**/2020/இ1 நாள் **25.01.2021** அன்று வழங்கப்பட்டு தார் சாலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சிறப்பு சாலைகள் திட்ட சாலைப் பணிகளுக்கு ரூ. **510.00** இலட்சம் டுபிட்கோ கடனாக நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளதால், நகராட்சியின் கடன் சுமையினை குறைக்கும் பொருட்டு கீழ்க்காணும் கான்கிரீட் சாலைகளை சிறப்பு சாலைகள் திட்ட சாலைப் பணிகளிலிருந்து நீக்கம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதியினைக் கோர மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | சாலையின் பெயர் | சாலை விவரம் | நீளம் மீட்டரில் |
|---|---|---|---|
| 1) | **தொகுப்பு – 1 (Package No.1)** | | |
| | 1) மாதா கோவில் தெரு | கான்கிரீட் சாலை | **260.00** |
| 2) | **தொகுப்பு – 2 (Package No. 2)** | | |
| | 1) கண்டி வெங்கட்ராமன் தெரு | கான்கிரீட் சாலை | **100.00** |
| | 2) கோபால் தெரு | கான்கிரீட் சாலை | **200.00** |
| | 3) தினசரி மார்கெட் & குரங்காட்டி தெரு | கான்கிரீட் சாலை | **413.00** |
| | 4) திருவேங்கடவிலாஸ் சந்து | கான்கிரீட் சாலை | **60.00** |
| 3) | **தொகுப்பு – 3 (Package No. 3)** | | |
| | 1) சந்துவீரி தெரு | கான்கிரீட் சாலை | **380.00** |
| | 2) காதர் தெரு மேற்கு | கான்கிரீட் சாலை | **90.00** |
| | 3) சிக்கா தெரு | கான்கிரீட் சாலை | **110.00** |
| | 4)அங்காளம்மன் கோவில்– அண்ணாசாலை | கான்கிரீட் சாலை | **130.00** |
| | | | **1743.00** |

**அலுவலக குறிப்பு :** நகராட்சியின் கடன் சுமையினை குறைக்கும் பொருட்டும், நகராட்சியின் நிதி நிலைமையினை கருதியும் சிறப்பு சாலைகள் திட்டத்தின் கீழ் அனுமதிக்கப்பட்ட கான்கிரீட் சாலைப் பணிகளில் **1743.00** மீட்டர் சாலைகளை நீக்கம் செய்ய நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் அனுமதி பெற முன்மொழிவுகள் அனுப்ப மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(4267/19/இ1)**

**தீர்மானம் எண். 1123**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(2) இராசிபுரம் நகராட்சியில் தெருவிளக்குப் பிரிவில் நகராட்சியால் பராமரிக்கப்படும் 14 வார்டுகளிலுள்ள தெருவிளக்குகள் இயக்க 2021–22–ஆம் ஆண்டிற்குத் தேவையான மின் பொருட்கள் விநியோகம் செய்ய ரூ. 400000/– மதிப்பீட்டுப் பணிக்கு 27.10.2021 அன்று பெறப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) ஸ்ரீ குமரன் எலக்ட்ரிகல்ஸ், 25, பெருமாள் கோவில் தெரு, சேலம் – 4 – ரூ. 399855/–
2) யாஷ்வைஷ் எலக்ட்ரிகல்ஸ், 3/81, கிழக்கு தெரு, குருசாமிபாளையம் – ரூ. 404550/–

குறைவான விலை விகிதம் வழங்கியுள்ள ஸ்ரீ குமரன் எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று பொருட்கள் விநியோகம் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வரப்பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் வழங்கியுள்ள ஸ்ரீ குமரன் எலக்ட்ரிகல்ஸ், சேலம்–4 அவர்களது ஒப்பந்தப்புள்ளியினை ஏற்கலாம்.

(இ1/3623/21)

**தீர்மானம் எண். 1124**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(3) இராசிபுரம் நகராட்சிக்குச் சொந்தமான ஈப்பு வாகனம் TN 28 AT 4555–இல் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்ய வாகனம் வாங்கப்பட்ட Mahindra டீலர் நிறுவனமான SKS ஆட்டோமொபைல்ஸ், நாமக்கல் நிறுவனத்தில் பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ. 60700/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணை மற்றும் செலவுத் தொகை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணை மற்றும் செலவுத் தொகை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.
இ) இப்பணிக்கான செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(3994/21/இ2)

**தீர்மானம் எண். 1125**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(4) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு தூய்மைப் பணியாளர்களுக்கு 2021–22–ஆம் ஆண்டிற்கான சீருடைகள் மற்றும் தையற்கூலி வழங்க வேண்டியுள்ளது. சீருடைகள் மற்றும் தையற்கூலி ஆகும் உத்தேச செலவினம் ரூ. 150000/–க்கு தனி அலுவலரின் அனுமதிக்கும், தி தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேசன் நிறுவனத்தில் சீருடைகள் வாங்குவதற்கும் தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.
**அலுவலகக் குறிப்பு :** அ) அனுமதிக்கலாம்.

ஆ) உத்தேச செலவினம் நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

**(3192/21/எச்1)**

**தீர்மானம் எண். 1126**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(5) இராசிபுரம் நகராட்சியில் ஓட்டுநராக பணிபுரிந்து **21.12.2020—இல்** இறந்த திரு வெ. கோபாலகிருஷ்ணன் அவர்கள் பெற்ற கடன் தொகையை அவருக்கு வழங்க வேண்டிய பணப்பயன்களில் பிடித்தம் செய்து வழங்கக் கோரி திரு வே. சந்தானம் அவர்கள் இராசிபுரம் நகராட்சிக்கு எதிராக இராசிபுரம் சார்பு நீதிமன்றத்தில் IA 1/2021, O.S. 81/2021-இல் வழக்கு தொடர்ந்தது. வழக்கில் ஆஜராகி வாதாட வழக்கறிஞர் திரு ஆர்.டி. தங்கதுரை அவர்களுக்கு வக்காலத்து வழங்கப்பட்டுள்ளது. மேற்படி வழக்கிற்கான வழக்குக் கட்டணம் ரூ. **10500/—** வழங்க கோரியுள்ளார். எனவே, மேற்படி அன்னாருக்கு வழக்குக் கட்டணம் ரூ. **10500/—** வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** வழக்கறிஞருக்கு வழக்குக் கட்டணம் ரூ. **10500/—**ற்கான செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(756/21/சி1)**

**தீர்மானம் எண். 1127**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(6) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் (கோவிட்—**19**) நோய் நகர பொது மக்களுக்கு பரவாமல் தடுக்கவும், கோவிட்—**19** நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள **3** லேயர் மாஸ்க், **500** எம்.எல். சேனிடைசர் பாட்டில், நீர்த்த சுண்ணாம்புத்தூள், பிளீச்சிங் பவுடர் **33%** ஆசிட், வெள்ளை பினாயில் (வாசைன) ஆகியவை அவசியம் தேவைப்படுவதால், அவற்றை கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. **4.95** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** மேற்கண்ட செலவினங்களை கோவிட்—**19** SDRF நிதியிலிருந்து Sec.15—இல் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(868/20/எச்1)**

**தீர்மானம் எண். 1128**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(7) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் கொரோனா வைரஸ் (கோவிட்—**19**) நோய் நகர பொது மக்களுக்கு பரவாமல் தடுக்கவும், கோவிட்—**19** நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ள கிருமிநாசினி லைசால் மருந்து இருப்பில் இல்லாத காரணத்தினாலும், அவசியம் தேவைப்படுவதாலும், கிருமிநாசினி மருந்து லைசால்—**1000** லிட்டர் கொள்முதல் செய்ய ஆகும் உத்தேச செலவினம் ரூ. **1.40** இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** மேற்கண்ட செலவினங்களை கோவிட்—**19** SDRF நிதியிலிருந்து Sec.15—இல் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(868/20/எச்1)**

**தீர்மானம் எண். 1129**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**( 8 )** இராசிபுரம் நகராட்சி பொது சுகாதார அ பிரிவிலுள்ள சி.பி. கன்னையா தெருவிலுள்ள **500** மீட்டர்அளவுள்ள சாக்கடை மூடப்பட்டுள்ளது. இடைவெளி அமைக்க கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண். | பெயர் மற்றும் முகவரி | வாடகை விவரம் |
|---|---|---|
| 1) | திரு கே. இராமசந்திரன் எர்த் மூவர்ஸ், பட்டணம் | ரூ. 800/– |
| 2) | திரு வெங்கடாசலம் எர்த் மூவர்ஸ், பட்டணம் | ரூ. 805/– |
| 3) | PRC, 694D, கலியம்பட்டி (அஞ்சல்) | ரூ. 810/– |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு கே. இராமசந்திரன் எர்த் மூவர்ஸ், பட்டணம் ஏற்க தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் ஒப்புதலுக்கு.

**அலுவலகக் குறிப்பு :** **1)** அனுமதிக்கலாம்.
**2)** தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி மேற்கொண்டதை அனுமதிக்கலாம்.

**(4159/21/எச்1)**

**தீர்மானம் எண். 1130**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**( 9 )** இராசிபுரம் நகராட்சி திட்டப் பணிகளின் விவரங்கள் தினத்தந்தி மற்றும் தினகரன் நாளேடுகளின் தொழில் மலரில் வெளியிடப்பட்டுள்ளன. அதன் விவரங்கள் வருமாறு.

தினத்தந்தி ரூ. **12701/–** / தினகரன் ரூ. **9526/–**

வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(இ1/3015/21)**

**தீர்மானம் எண். 1131**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**( 10 )** இராசிபுரம் நகராட்சி அலுவலக ஆணை ந.க.எண். **2293/19**/எச்**1** நாள் **27.02.2020** மற்றும் **20.10.2021**–இன்படி இராசிபுரம் நகராட்சிக்குட்பட்ட **27** வார்டுகளிலும் **80** தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு தூய்மைப் பணி செய்ய Relyon Facility Service Pvt. Ltd., Chennai – 97 என்ற நிறுவனத்திற்கு **01.11.2020** முதல் **31.10.2021** வரையில் ஓராண்டு காலத்திற்கு வெளி கொணர்வு மூலம் தூய்மைப் பணி மேற்கொள்ள ஆணையிடப்பட்டது. வருகின்ற **31.10.2021** முதல் ஒப்பந்த காலம் முடிவடைய உள்ளதால், **1.11.2021** முதல் **31.10.2022** வரையில் மேலும் ஓராண்டு காலத்திற்கு ஒப்பந்த காலத்தை அதே விலை விகிதத்தில் ரூ. **529/–** ஒப்பந்ததாரரிடமிருந்து கடிதம் வரப்பெற்றது. எனவே, இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப்

பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணிக்கு ஒப்பந்த அடிப்படையில் வெளி கொணர்வு மூலம் 80 தூய்மைப் பணியாளர்களைக் கொண்டு .11.2021 முதல் ஓராண்டு காலத்திற்கு கீழ்க்காணும் நிபந்தனைகளுக்குட்பட்டு பணி மேற்கொள்ள மேற்படி நிறுவனத்திற்கு காலநீட்டிப்பு செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. ஓராண்டிற்கான உத்தேச செலவினம் ரூ. 155.00 இலட்சமாகும்.

**நிபந்தனைகள்**

1) விலைவிகிதம் மற்றும் இதர நிபந்தனைகளில் எவ்வித மாற்றம் இல்லை.
2) ஒப்பந்தம் (Agreement) மேலும் ஓராண்டிற்கு வழங்க வேண்டும்.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை திடக்கழிவு மேலாண்மை நிதியிலிருந்தும் (SUC) நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(2293/19/எச்1)

**தீர்மானம் எண். 1132**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(11) இந்நகராட்சிக்குச் சொந்தமான புதிய பேருந்து நிலையத்தில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமைக்கு 27.10.2021 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை |
|---|---|---|
| 1) | திருமதி கே. தமிழரசி, க/பெ. கனகராஜ், 34, வெங்கடசாமி தெரு, இராசிபுரம். | ரூ. 1,70,000/– |
| 2) | திருமதி கே. சாந்தி, க/பெ. கந்தசாமி, 21/19, தர்மகர்த்தா சந்து, கோனேரிப்பட்டி, இராசிபுரம். | ரூ. 1,75,500/– |

மேற்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வ.எண். 1–இல் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. 170000/–விட வ.எண். 2–இல் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. 175500/– விட அதிகமாக உள்ளது. இது சென்றாண்டு தொகை மற்றும் மூன்றாண்டு சராசரியைவிட குறைவாகவும் உள்ளது.

**அலுவலகக் குறிப்பு :** புதிய பேருந்து நிலையத்தில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்து கொள்ளும் உரிம இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. 175500/– திருமதி கே. சாந்தி, க/பெ. கந்தசாமி என்பவர் கோரியுள்ளார். இது சென்றாண்டு தொகை மற்றும் மூன்றாண்டு சராசரியைவிட குறைவாக உள்ளது. மேற்படி குத்தகை இனம் கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக மூன்று முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்து கொள்ளும் உரிமத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர ஒருவரும் முன்வரவில்லை. நான்காம் முறையாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. மேற்கண்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. எனவே, துறை ரீதியான வசூல் நடவடிக்கை மேற்கொள்ள முடியாத காரணத்தினாலும், கொரோனா வைரஸ் தாக்கம் காரணத்தினாலும் மீண்டும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதற்கு அதிகமான தொகைக்கு செல்லும்

வாய்ப்பு குறைவாக இருப்பதால் வ.எண். 2–இல் கண்டுள்ள திருமதி கே. சாந்தி என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 1133**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**( 12 )** இந்நகராட்சிக்குச் சொந்தமான பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடத்தில் சுங்கம் வசூல் செய்து கொள்ளும் உரிமைக்கு 27.10.2021 அன்று பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி நடைபெற்றதில் ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றுள்ளது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளித் தொகை |
|---|---|---|
| 1) | திரு எ. மோகன், த/பெ. அ. அங்கமுத்து,<br>29/48, மேற்கு காலனி தெரு | ரூ. 85,500/– |
| 2) | திரு எம். பர்கத் அலி, த/பெ. முகமது கவுஸ்,<br>98/6, ஜாகீர் உசேன் சாலை, இராசிபுரம். | ரூ. 84,700/– |

மேற்கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளியில் வ.எண். 1–இல் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. 85500/–விட வ.எண். 2–இல் கண்டுள்ள ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. 84700/– விட அதிகமாக உள்ளது. இது சென்றாண்டு தொகை மற்றும் மூன்றாண்டு சராசரியைவிட குறைவாகவும் உள்ளது.

**அலுவலகக் குறிப்பு :** பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் வசூல் செய்து கொள்ளும் உரிம இனத்திற்கு உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூ. 85500/– திரு எ. மோகன், த/பெ. அங்கமுத்து என்பவர் கோரியுள்ளார். இது சென்றாண்டு தொகை மற்றும் மூன்றாண்டு சராசரியைவிட குறைவாக உள்ளது. மேற்படி குத்தகை இனம் கொரோனா வைரஸ் பாதிப்பு காரணமாக மூன்று முறை ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் பழைய பேருந்து நிலைய கட்டண கழிப்பிடம் வசூல் செய்து கொள்ளும் உரிமத்திற்கு ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோர ஒருவரும் முன்வரவில்லை. நான்காம் முறையாக ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரியதில் ஏலம் கோர ஒருவரும் முன்வரவில்லை. மேற்கண்டுள்ள இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. எனவே, மேற்படி இனத்தை துறை ரீதியான வசூல் மேற்படி இனத்தை துறை ரீதியான வசூல் ஏதும் செய்ய துப்புரவு பணி மேற்பார்வையாளர்–1 மற்றும் DBC பணியாளர்கள் – 2 மொத்த 3 நபர்கள் நியமனம் செய்து வசூல் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி பணியாளர்களுக்கு 365 நாட்களுக்கு ஊதியம் ரூ. 90000/– வீதம் சராசரியாக வழங்கப்பட்டு வருகிறது. மேலும், கொரோனா வைரஸ் தாக்கம் காரணத்தினாலும் மீண்டும் ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரினால் இதற்கு அதிகமான தொகைக்கு செல்லும் வாய்ப்பு குறைவாக இருப்பதால் வ.எண். 1–இல் கண்டுள்ள திரு எ. மோகன் என்பவர் கோரியுள்ள உயர்ந்தபட்ச ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(4523/20/அ2)

**தீர்மானம் எண். 1134**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(13) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் திடக்கழிவு மேலாண்மை பணியில் குப்பை அகற்றும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வந்த 65 டம்பர் பின் (Dumber Bin) தற்போது பயன்பாட்டில் இல்லாமல், பயனற்ற முறையில் வைக்கப்பட்டுள்ளது. ஒரு பின்னின் தோராய எடை 210 கிலோ இருக்கும். எனவே, பயனற்ற நிலையிலுள்ள 65 டம்பர் பின்களை பொது ஏலம் விட்டு நடவடிக்கை மேற்கொள்ள தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) அனுமதிக்கலாம்.

(4130/21/எச்1)

**தீர்மானம் எண். 1135**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(14) தூய்மை பாரத இயக்கத்தின் சார்பாக 27.09.2021 முதல் 02.10.2021 வரை Azadika Amrit Mahotsav 75–ஆவது சுதந்திர தின விழா கொண்டாட்டத்தின் சார்பாக பல்வேறு நிகழ்ச்சிகள் நடத்த தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையில் குப்பை தரம் பிரித்தல் தொடர்பான விழிப்புணர்வு பொதுக்கழிப்பிடம் பயன்படுத்த விழிப்புணர்வு கழிவுகளை கலைப்பொருட்களாக மாற்றுதல் ஆகிய நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு இறுதி நாளன்று அனைத்து தூய்மைப் பணியாளர்களுக்கு நற்சான்றிதழ் வழங்கப்பட்டது. 200 நற்சான்றிதழ்கள் பிரிண்ட் செய்த வகையில் செலவு செய்யப்பட்டத் தொகை ரூ. 3600/– இந்நகராட்சி துப்புரவு ஆய்வருக்கு திருப்பி வழங்க தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.

(3909/21/எச்1)

**தீர்மானம் எண். 1136**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(15) இராசிபுரம் நகராட்சியில் வடகிழக்கு பருவமழை முன் எச்சரிக்கை நடவடிக்கை எடுக்கும் பொருட்டு நகராட்சிப் பகுதிகளிலுள்ள சாக்கடைகளில் தூர்வாருவதற்கு JCP இயந்திரம் 1 மணி நேர வாடகை விவரத்திற்கும், டிராக்டர் டிரக் 1 நாள் வாடகை விவரத்திற்கும் விலைப்புள்ளிகள் கோரப்பட்டது. கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது.

| பெயர் | JCP 1 மணி நேர வாடகை (ரூ.) | டிராக்டர் டிரக் 1 நாள் வாடகை (ரூ.) |
|---|---|---|
| 1) திரு ஆர். பெரியசாமி | 1000 | 2750 |
| 2) திரு ஆர். பிரகாசம் | 950 | 2500 |
| 3) திரு கே. ராமசாமி | 1050 | 2800 |

மேற்கண்ட விலைப்புள்ளிகளில் திரு ஆர். பிரகாசம் என்பவர் குறைவான விலைப்புள்ளியை ஏற்கவும், அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதற்கும் தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு ஆர். பிரகாசம் என்பவரின் விலைப்புள்ளியினை அனுமதிக்கலாம்.
2) முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(3579/21/எச்1)

**தீர்மானம் எண். 1137**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**( 16 )** இராசிபுரம் நகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவில் குப்பை அகற்றும் பணியில் வீடு வீடாக குப்பை சேகரிக்கும் பணிக்கு பயன்படுத்தப்பட்டு வரும் பேட்டரி வாகனம் (BOV) ஆணையர் அவர்களின் ஆணையின்படி 6 BOV வாகனங்கள் பழுது நீக்கம் சரிசெய்ய இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1) Covai Green Ride, Coimbatore - Rs. 329800/-
2) Hidel Power Products Pvt. Ltd., Erode- Rs. 329700/-

வ.எண். 2–இல் குறிப்பிட்டுள்ள நிறுவனத்தினர் குறைந்த ஒப்பந்தப்புள்ளி வழங்கியுள்ளதால் Hidel Power Products Pvt. Ltd., Erode என்ற நிறுவனத்தினர் ஏற்க தனி அலுவலரின் அனுமதி வேண்டி கூட்டப்பொருள் ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

(4009/21/எச்1)

**தீர்மானம் எண். 1138**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**( 17 )** இராசிபுரம் நகராட்சி குடிநீர் வடிகால் நிதியின்கீழ் வார்டு எண். 20, 11 மற்றும் 8 ஆகியப் பகுதிகளில் குடிநீர் விநியோக பகிர்மான குழாய் அமைத்தல் பணி மேற்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், 29.09.2021 அன்று பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் விவரங்கள் பின்வருமாறு.

| | | | |
|---|---|---|---|
| 1 | திரு. ஆர். பெரியசாமி, ஒப்பந்ததாரர்<br>மசக்காளிப்பட்டி, இராசிபுரம் | – | மதிப்பீட்டைவிட 0.26 % குறைவு |
| 2 | திரு. என். செல்லப்பன், ஓப்பந்ததாரர்<br>27, வி. நகர் ரோடு எண். 17, இராசிபுரம் | – | மதிப்பீட்டைவிட 1.06 % அதிகம் |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு ஆர். பெரியசாமி, மசக்காளிப்பட்டி, ஒப்பந்ததாரர் குறைந்த ஒப்பந்தப்புள்ளியை (0.26% ) ஏற்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. இப்பணியின் செலவினத்தை குடிநீர் வடிகால் நிதியின்கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :** அ) மன்றம் அனுமதிக்கலாம்.
ஆ) இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் வடிகால் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(3040/21/இ2)

**தீர்மானம் எண். 1139**

அனுமதிக்கப்பட்டது.

(18) இராசிபுரம் நகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் தூய்மைப் பணிகள் மேற்கொள்ளும் போது மற்றும் வாகனங்கள் சிறிய பழுதுகள் சரிசெய்து கொள்ளும் திடக்கழிவு மேலாண்மைப் பணிகளில் சிறிய செலவினங்களை மேற்கொள்ளவும் துப்புரவு அலுவலருக்கான தனிப்பட்ட தொகை (PA) ரூ. 3000/– வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கு கூட்டப்பொருள் வைக்கப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அனுமதிக்கலாம்.

**(4147/21/எச்1)**

**தீர்மானம் எண். 1140**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(19) இராசிபுரம் நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ஏற்கனவே பழுதடைந்துள்ள தினசரி அங்காடியினை இடித்துவிட்டு புதிய நவீன தினசரி அங்காடியினை அமைக்க கருத்துருக்கள் தயாரிக்கப்பட வேண்டியுள்ளது. TUFIDCO, நகராட்சி நிர்வாக இயக்குநரகம், நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரகம் அலுவலகங்களில் திட்ட வரைபடங்கள் AD அளவில் 10 பிரதிகள் தயாரிக்கவும், கலர் வரைபடங்கள் தயாரிக்கப்பட வேண்டும். நகராட்சியில் போதிய பணியாட்கள் மற்றும் வரைபட தயாரிப்பு உபகரணங்கள் இல்லாததாலும் விரிவான திட்ட அறிக்கை தனியார் நிறுவனத்திலிருந்து தயாரிக்க ரூ. 2.00 இலட்சம் ஆகும். மேற்காணும் பணியினை ஒப்பந்தப்புள்ளி மூலம் மேற்க்கொள்ளவும், செலவினத்தை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** மன்றம் அனுமதிக்கலாம்.

**(3472/21/எச்1)**

**தீர்மானம் எண். 1141**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(20) இராசிபுரம் நகராட்சியில் ஜல்ஜீவன் மிஷன் திட்டத்திற்காக நிர்வாக எல்லைக்குள், குடிநீர் வழங்கல் மற்றும் பாதாள சாக்கடை விவரங்கள் உள்ளடக்கிய வரைபடங்கள் தயாரிக்க நகராட்சியில் போதிய பணியாளர்கள் இல்லை. எனவே, நிர்வாக வரைபடம், குடிநீர் வழங்கல் வரைபடம், பாதாள சாக்கடை இணைப்புகளின் வரைபடம், வார்டு வாரியான குடிநீர் மற்றும் பாதாள சாக்கடை இணைப்புகளின் வரைபடம் தயார் செய்ய தனியார் நிறுவனங்கள் மூலம் மேற்க்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ. 80000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகின்றது. பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

| | | |
|---|---|---|
| 1) Smart Builders, 1/298B1, Veerapandi, Tirupur | - | Rs. 80000/- |
| 2) Jananam Designers & Builders, 11, Shri Sakthi Complex, Pazhani Bye pass, Dindigal | - | Rs. 110500/- |
| 3) S.S. Builders, 8/9, South Street, Thethupatti, Dindigal | - | Rs. 102000/- |

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான Smart Builders விலைப்புள்ளியினை பெற்று, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 80000/– உத்தேச செலவினத்திற்கும் செலவினத்தை குடிநீர் நிதியில் மேற்க்கொள்ள அனுமதிக்கலாம்.
ஆ) குறைவான விலைப்புள்ளியினை ஏற்று தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(இ2/3134/21)

**தீர்மானம் எண். 1142**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(21) இராசிபுரம் நகராட்சி 27 வார்டுகளில் உள்ள அனைத்து சாலைகளும் வகைப்படுத்தி (Unique code) தனித்துவமான எண்கள் வழங்கவும், அ4 அளவு கலர் நகல் தயாரிக்கவும் நகராட்சியில் போதிய பணியாளர்கள் மற்றும் தேவையான உபகரணங்கள் இல்லை. எனவே, அனைத்து சாலைகளும் அளவீடுகள் செய்து, சாலைகளை வகைப்படுத்த தனியார் நிறுவனங்கள் மூலம் மேற்க்கொள்ள ஆகும் உத்தேச மதிப்பீடு ரூ. 80000/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. பணியின் அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரங்கள் வருமாறு.

1) Smart Builders, 1/298B1, Veerapandi, Tirupur - Rs. 80000/-
2) S.S. Builders, 8/9, South Street, Thethupatti, Dindigal - Rs. 102000/-
3) Jananam Designers & Builders, 11, Shri Sakthi Complex, Pazhani Bye pass, Dindigal - Rs. 110500/-

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைவான Smart Builders விலைப்புள்ளியினை ஏற்று, தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதற்கு மன்ற அங்கீகாரம் வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** அ) ரூ. 80000/– உத்தேச செலவினத்திற்கும் செலவினத்தை வருவாய் நிதியில் மேற்க்கொள்ள அனுமதிக்கலாம்.
ஆ) குறைவான விலைப்புள்ளியினை ஏற்று தனி அலுவலர் முன் அனுமதி பெற்று பணியாணை வழங்கியதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(இ1/2788/21)

**தீர்மானம் எண். 1143**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(22) இராசிபுரம் நகராட்சியில் 2020–21–ஆம் ஆண்டில் 15–ஆவது மத்திய நிதிக்குழுவினை எதிர்நோக்கி கீழ்க்காணும் குடிநீர்ப் பணிகள் மேற்க்கொள்ளப்பட்டதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.

| பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ. இலட்சத்தில்) |
|---|---|
| ஆழ்துளைக் கிணறுகளுக்கு ஸ்பேர் மோட்டார் வாங்குதல் | 3.80 |
| வார்டு எண். 13,17 மற்றும் 18 பகுதிகளில் உப்புநீர் குழாயமைத்தல் | 2.00 |
| கோனேரிபட்டி காட்டுக்கொட்டாய் பொதுகழிப்பிட குழாய் பழுதுகள் சரி செய்தல் | 0.60 |

| | |
|---|---|
| வார்டு எண். 20, 21 மற்றும் 27 ஆகிய பகுதிகளில் பகிர்மானக் குழாய் நீட்டிப்பு செய்து இணைத்தல் | 1.20 |
| வார்டு எண். 1,2,8,11,13 மற்றும் 18 ஆகிய பகுதிகளுக்கு உப்பு நீர்க் குழாய் வசதி அமைத்தல் | 2.50 |
| வார்டு எண். 7,8,15,24 ஆகிய பகுதிகளுக்கு உப்புநீர் குழாய் அமைத்தல் | 1.00 |
| ஆழ்துளைக் கிணறு மற்றும் திறந்தவெளிக் கிணறுகளில் உள்ள சிறு மின்விசைப்பம்புகள் மற்றும் நீர்மூழ்கி மின்மோட்டார்களில் ஏற்படும் பழுதுகள் சரி செய்தல் | 8.00 |
| வார்டு 23 மற்றும் 26 ஆகிய பகுதிகளில் சின்டெக்ஸ் டேங்க் மாற்றி அமைத்தல் | 3.50 |
| வார்டு 26 காட்டூர் கலைவாணி நகர் சின்டெக்ஸ் டேங்க் மற்றும் பிளாட்பாரம் பழுது சரி செய்தல் | 1.20 |
| வார்டு 1 முதல் 13 வரையுள்ள திறந்தவெளி கிணற்றில் இருந்து உப்பு நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோக பிரதான மற்றும் பகிர்மான குழாய்களின் பழுதுகள் உடன் சரி செய்தல் | 9.00 |
| வார்டு 14 முதல் 27 வரையுள்ள திறந்தவெளி கிணற்றில் இருந்து உப்பு நீர் வழங்கும் குழாய்கள் மற்றும் குடிநீர் விநியோக பிரதான மற்றும் பகிர்மான குழாய்களின் பழுதுகள் உடன் சரி செய்தல் | 9.00 |
| வார்டு 10, 25 மற்றும் 26 வழியாக செல்லும் குடிநீர் பகிர்மான குழாய்களின் பழுது சரி செய்து பகிர்மான குழாய் நீட்டிப்பு செய்தல் | 1.00 |
| **மொத்தம்** | **42.80** |

மேலும், தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்த வேண்டிய குடிநீர் கட்டணம் ரூ. 1,47,02,038/– (மார்ச் 2020 முதல் ஜனவரி 2021 வரை) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு செலுத்தப்பட்டதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.

மேலும், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்த வேண்டிய மின் கட்டணம் ரூ. 4,49,457/– (பிப்ரவரி 2020 முதல் மே 2021 வரை) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டதற்கு மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகின்றது.

**அலுவலகக் குறிப்பு :**

அ) 15–ஆவது மத்திய நிதிக்குழுவினை எதிர்நோக்கி குடிநீர்ப் பணிகள் மேற்க்கொள்ளப்பட்டதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

ஆ) தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்திற்கு குடிநீர் கட்டணம் செலுத்தப்பட்டதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

இ) தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மின் கட்டணம் செலுத்தப்பட்டதற்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

**(இ2/4303/21)**

**தீர்மானம் எண். 1144**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**( 23 )** இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் பொது மக்களுக்கு டெங்கு நோய் பரவாமல் தடுக்க டெங்கு நோய் தடுப்பு பணிகளை DBC பணியாளர்களைக் கொண்டு **01.06.2021** முதல்

31.08.2021 வரை 3 மாதங்களுக்கு மகளிர் குழுக்கள் மூலம் மேற்கொள்ளும் பணிக்கு 26.05.2021 அன்று நான்கு விலைப்புள்ளிகள் பெறப்பட்டது. அவற்றின் விவரம் பின்வருமாறு.

| வ.எண். | குழுவின் பெயர் | ஒரு நாளைக்கு ஒரு DBC பணியாளர் தினக்கூலி |
|---|---|---|
| 1 | பாபாஜி மகளிர் குழு, 1, நடுகாலனி, இராசிபுரம் | ரூ. 160/– |
| 2 | ரெயின்போ மகளிர் குழு, 13, மில் சந்து, இராசிபுரம் | ரூ. 160/ |
| 3 | கற்பக விநாயகர் மகளிர் குழு, மல்லி தெரு, இராசிபுரம் | ரூ. 170/ |
| 4 | சுமங்கலி மகளிர் குழு, எல்லப்பா தெரு, இராசிபுரம் | ரூ. 170/ |

குறைந்த விலைப்புள்ளி வழங்கிய (1) பாபாஜி மகளிர் குழு (2) ரெயின்போ மகளிர் குழு ஆகிய இரு மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கு பணியாணை வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மன்றம் அனுமதிக்கலாம்.
3) அவசர அவசியங் கருதியும், பொது சுகாதார நலன் கருதியும், நகர் மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணியாணையும் ஊதியமும் வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1550/18/எச்1)

**தீர்மானம் எண். 1145**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(24) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் பொது மக்களுக்கு டெங்கு நோய் பரவாமல் தடுக்க 55 DBC பணியாளர்களைக் கொண்டு இரு மகளிர் குழு மூலம் டெங்கு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், 01.06.2021 முதல் 31.08.2021 வரை மூன்று மாதங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 3.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** 1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(1550/18/எச்1)

**தீர்மானம் எண். 1146**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

(25) இராசிபுரம் நகராட்சிப் பகுதிகளில் பொது மக்களுக்கு டெங்கு நோய் பரவாமல் தடுக்க 55 DBC பணியாளர்களைக் கொண்டு இரு மகளிர் குழு மூலம் டெங்கு நோய் தடுப்பு பணிகளை மேற்கொள்ளவும், 01.12.2021 முதல் 31.03.2021 வரை நான்கு மாதங்களுக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ. 15.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** மேற்கண்ட செலவினங்களை நகராட்சி வருவாய் பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(1550/18/எச்1)**

**தீர்மானம் எண். 1147**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

**( 26 )** எழுதுபொருட்கள், உள்ளாட்சித் தேர்தல் – **2021** வருவதையொட்டி A4 பேப்பர், FS பேப்பர், மூடுதாள் மற்றும் Tag ஆகியவை இருப்பில் குறைவாக உள்ளதால், மேற்படி பொருட்கள் அதிக செலவு பிடிக்கும் என்பதால், மேற்க்காணும் பொருட்கள் வாங்க ஆகும் உத்தேச செலவுத் தொகை ரூ. **3,00,000/–**க்கும், மேற்படி பொருட்களை ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட் அவர்களிடம் வாங்கவும், பணியாணை வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக் குறிப்பு :** **1)** மன்றம் அனுமதிக்கலாம்.
**2)** மேற்க்காணும் ஈரோடு மாவட்ட பெண்கள் எழுதுபொருட்கள் அச்சுக்கூட மற்றும் தையல் தொழிலாளர்கள் தொழிற் கூட்டுறவு சங்கம் லிமிடெட் என்ற நிறுவனத்திடம் வாங்கவும் பணியாணை வழங்கவும் மன்றம் அனுமதிக்கலாம்.

**(111/21/பி3)**

**தீர்மானம் எண். 1148**

அலுவலகக் குறிப்பினை ஏற்று அனுமதிக்கப்பட்டது.

ஒம் /– சி. கிருபாகரன்,
தனி அலுவலர்.

/ உண்மை நகல் /

ஆணையாளர் (கூ.பொ.),
இராசிபுரம் நகராட்சி